செய்தி வெளியீடு

செ.வெ.எண்.22 நாள்:10.11.2017

**நீலகிரி மாவட்டம் உதகை சி.எஸ்.ஐ.ஜெல் பெண்கள் நினைவு மேல்நிலைபள்ளியில் இன்று (10.11.2017) தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினி வழங்கும் விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட்திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார்.**

நீலகிரி மாவட்டம் உதகை சி.எஸ்.ஐ.ஜெல் பெண்கள் நினைவு மேல்நிலைபள்ளியில் இன்று (10.11.2017) தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினி வழங்கும் விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட்திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கி பேசியதாவது,

“இன்றைய இளைஞர்கள், நாளைய தலைவர்கள். இந்த நாட்டின் தலையெழுத்தை மாற்றும் வல்லமை பெற்றவர்கள் இளைஞர்கள்/ இளம்பெண்கள். அதேபோல ஒரு நாட்டின் மிகப்பெரிய செல்வம் / நிலையான செல்வம் மனிதவளம். மனித வளத்தை பெருக்குவது ஒன்று கல்வி மற்றொன்று பயிற்சி. எனவே ஒரு நாட்டிற்கு/மாநிலத்திற்கு முறையான கல்வியை கொடுத்து விட்டால், அந்த கல்வி அந்த மாநிலத்தையும் அதில் வாழும் மக்களையும் காப்பாற்றும் என்ற உயர்ந்த எண்ணித்தில்தான் தமிழக அரசு கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்தி வருகிறது. நாங்கள் படிக்கும் காலத்தில் எல்லாம் இது போன்ற சலுகைகள் இல்லை. எனவே மாணவ, மாணவியர்கள் மடிக்கணினியை முறையாக பயன்படுத்தி, கற்ற கல்வியை, பெற்ற பயிற்சியைக் கொண்டு நாட்டிற்கும், வீட்டிற்கும் நல்ல பெயரை பெற்றுத்தர வேண்டும். எனவே இங்கு வந்துள்ள மாணவிகள் அரசின் நலத்திட்டங்களை பெற்று நீங்களும் முன்னேறி, நாட்டையும் முன்னேற்ற வேண்டும் எனக் கூறினார்.

நீலகிரி மாவட்டத்தில் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் இயங்கும் அரசு /அரசு உதவி பெறும் 42 பள்ளிகளில் 2016-2017 ஆம் கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு 4588 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.4,80,98,298/- மதிப்பில் தமிழக அரசின் விலையில்லா மடிகணினிகள் வழங்கப்படவுள்ளது. அதன் அடிப்படையில் இன்று முதற்கட்டமாக சி.எஸ்.ஐ.ஜெல் பெண்கள் நினைவு மேல்நிலைபள்ளியில் பயின்று விடைபெற்றுள்ள 127 மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக உதகை தீட்டுக்கல் பகுதியில் டெங்கு தடுப்பு மற்றும் சுகாதார பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் திரு.கே.ஆர்.அர்ஜுனன், நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் திரு.சி.கோபாலகிருஷ்ணன், உதகை சட்டமன்ற உறுப்பினர் திரு.கணேஷ், குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சாந்திராமு, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.கே.பிச்சையப்பன், மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.கே.ஸ்ரீதேவி பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியைகள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர்.